Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நட்சத்திர பதிகங்கள்



ACC. NO.
46363

'தமிழ் வேத நாவலர்', 'வைத்தியமணி'

சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை, தேவகோட்டை.

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்
அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46363

நட்சத்திர பதிகங்கள்

இந்நூல் ஆசிரியர் :

"தமிழ் வேதநாவலர்", "வைத்தியமணி"
முத்தமிழ் வேதத் திருச்சபை
சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
தேவகோட்டை

இஃது
கனடா டாக்டர் **சித. ஏகப்பன் செட்டியார்** அவர்கள்
ஆர்வத்தினாலும் பேரன்பினாலும்

கோயம்புத்தூர்
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நூலின் பெயர்	:	நட்சத்திர பதிகங்கள்
முதற் பதிப்பு மறுபதிப்பு	:	சர்வதாரி ஆண்டு (2008) வைகாசி மாதம் ஸ்ரீவிளம்பி ஆண்டு (2019) தை மாதம்
நூலாசிரியர்	:	சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
உரிமை	:	முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.
பக்கங்கள்	:	56
வெளியீடு	:	முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.
தாள்	:	18 கிலோ மாப்லித்தோ
நூலின் அளவு	:	டெமி 1/8
விலை	:	ரூ. 51/-
எழுத்து	:	12 புள்ளி
கிடைக்குமிடம்	:	Dr. SV. முருகேஷ் R.I.M.P.A.M.I.H. முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் சித்த மருத்துவம் கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை. இராம. ஆதிரெத்தினம் இணைச் செயலாளர், முத்தமிழ் வேதத் திருச்சபை 19, ரெகுநாதபுரம் மேற்கு, தேவகோட்டை. போன் : 95+4561+270113 செல் : 9486361107 உமாமன்னியன் நூலகம் 105/A1, கண்டதேவி ரோடு தேவகோட்டை - 630 302. செல் : 9486361107
கணினி & அச்சு அமைப்பு	:	ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் கோயமுத்தூர் - 641 012. செல் : 9361410269 email : sribalajigraphics.cbe@gmail.com

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்



இந்நூல் ஆசிரியர் :
"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி"
சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
தேவகோட்டை

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முன்னுரை

எம் ஞானத்தெளிவு குருவின் திருவடி உச்சி மேற்கொண்டு முன்னுரை எழுதுவோமாக.

உலக மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ நம் முன்னோர்களாகிய ஞானியர்கள், சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் ஆக்கி தந்த நூல்கள் பல. அடங்கன்முறை தேவாரமாகிய எழுதாக்கிளவி என்னும் பதிகங்கள் ஆக்கித் தந்த மூவரும் திருவாசகம் தந்த மாணிக்கவாசகரும், ஆகமம் அருளிச் செய்த திருமூலரும் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என அருளிச் செய்துள்ளார்கள். கலியுகக் கொடுமை தீர வேண்டி எம் ஞானத் தெளிவு குருவின் நல் ஆசி பெற்ற சிரஞ்சீவி கனடா. டாக்டர். சித. ஏகப்பன் அவர்கள் வேண்டுகோளின்படி அவரவர் நட்சத்திரங்களுக்குரிய பதிங்களை வெளியிட்டால் ஓதி ஓதி பயன்பெறட்டும். நல்வாழ்வு வாழட்டும். ஆகவே உடனே நட்சத்திர பதிகங்களை வெளியிட்டு உலகமக்களுக்கு ஞானஒளியைக் காட்டும் பதிகங்களை வெளியிட்டுள்ளோம். இப்பதிகங்களை ஓதிவர சுய உணர்வு மேலிட மேலிட இறைத்தன்மையை பெற்று இயமநியம வழிநடந்து இறையருள் பெறல் எளிது என எழுதி நிறைவு செய்கிறோம்.

இவண்
அடியார்க்கு அடியேன்
இராம. ஆதிரெத்தினம்

Koviloor Digital Library

உ
சிவமயம்

1. அகவதி : திருப்பறியல் வீரட்டம்.
பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. க

மருந்த னமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. உ

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்ருன்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ங

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா லுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ் சூழ வீரட்டத் தானே. ச

கரிந்தா ரிடுகாட்டி லாடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ரு

அரவுற்ற நாணு அனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்ருன்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே. சா

Koviloor Digital Library

உ
சிவமயம்

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையா ரரவ மழகா அசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. எ

வளைக்கும் மெயிற்றின் னரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே. அ

வளங்கொள் மலர்மே லயன்ஓத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழுத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே. கூ

சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதா னடியார் பெருமான்
உடையன் புலியி னுரிதோ லரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே. ௰

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே. ௰க

திருச்சிற்றம்பலம்

2. பரணி : திருக்கடவூர் வீரட்டம்
பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சடையுடை யானுநெய் யாடலா னுஞ்சரி கோவண
உடையுடை யானுமை யார்ந்தவொண் கண்ணுமே கேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தர னல்லனே க

Koviloor Digital Library

உ
சிவமயம்

எரிதரு வார்சடை யானும்வெள் ளையெரு தேறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனைந் தேத்தவே
கரிதரு காலனைச் சாடின னுங்கட வூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டா னத்தர னல்லனே. உ

நாதனும் நள்ளிரு ளாடின னுந்நளிர் போதின்கண்
பாதனும் பாய்புலித் தோலின னும்பசு வேறியும்
காதலர் தண்கட வூரின னுங்கலந் தேத்தவே
வேதம தோதியும் வீரட்டா னத்தர னல்லனே. ௩

மழுவமர் செல்வனு மாசிலா தபல பூதமுன்
முழவொலி யாழ்குழல் மொந்தைகொட் டமுது காட்டிடைக்
கழல்வளர் கால்குஞ்சித் தாடின னுங்கட வூர்தனுள்
விழவொலி மல்கிய வீரட்டா னத்தர னல்லனே. ௪

சுடர்மணிச் சுண்ணவெண் ணீற்றின னுஞ்சுழல் வாயதோர்
படமணி நாக மரைக்கசைத் தபர மேட்டியும்
கடமணி மாவுரித் தோலின னுங்கட வூர்தனுள்
விடமணி கண்டனும் வீரட்டா னத்தர னல்லனே. ௫

பண்பொலி நான்மறை பாடியா டிப்பல வூர்கள்போய்
உண்பலி கொண்டுழல் வானும்வா னின்னொளி மல்கிய
கண்பொலி நெற்றிவெண் டிங்களா னுங்கட வூர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டா னத்தர னல்லனே. ௬

செவ்வழ லாய்நில னாகிநின் றசிவ மூர்த்தியும்
முவ்வழல் நான்மறை யைந்துமா யமுனி கேள்வனும்
கவ்வழல் வாய்க்கத நாகமார்த் தான்கட வூர்தனுள்
வெவ்வழ லேந்துகை வீரட்டா னத்தர னல்லனே. ௭

அடியிரண் டோருடம் பைஞ்ஞான்கி ருபது தோள் தச
முடியுடை வேந்தனை மூர்க்கழித்தமுதல் மூர்த்தியும்
கடிகம ழும்பொழில் சூழமந் தண்கட வூர்தனுள்
வெடிதலை யேந்தியும் வீரட்டா னத்தர னல்லனே. ௮

Koviloor Digital Library

உ
சிவமயம்

வரைகுடை யாமழை தாங்கின னும்வளர் போதின்கண்
புரைகழிந் தோங்கிய நான்முகத் தான்புரிந் தேத்தவே
கரைகடல் சூழ்வையங் காக்கின்ற னுங்கட வூர்தனுள்
விரைகமழ் பூம்பொழில் வீரட்டா னத்தர னல்லனே. ௯

தேரரு மாசுகொள் மேனியா ருந்தெளி யாததோர்
ஆரருஞ் சொற்பொரு ளாகிநின் றவெம தாதியான்
காரிளங் கொன்றைவெண் டிங்களா னுங்கட வூர்தனுள்
வீரமுஞ் சேர்கழல் வீரட்டா னத்தரனல்லனே. ௰

வெந்தவெண் ணீறணி வீரட்டா னத்துறை வேந்தனை
அந்தணர் தங்கட வூருளா னையணி காழியான்
சந்தமெல் லாமடிச் சாத்தவல் லமறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியா டக்கெடும் பாவமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

3. கார்த்திகை : கோயில்
பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறு நெய்யொடுபால் தயிர்
அந்தணர்பிரி யாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே ௧

கொட்டமேகம ழுங்குழலாளொடு
கூடினாயெரு தேறினாய்நுதற்
பட்டமேபுனைவா யிசைபாடுவ பாரிடமா
நட்டமேநவில்வாய் மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவா யிவைமேவிய தென்னைகொலோ ௨

Koviloor Digital Library

உ
சிவமயம்

நீலத்தார்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகை தொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. ௩

கொம்பலைத்தழ கெய்திய நுண்ணிடைக்
கோலவாண்மதி போலமுகத்திரண்
டம்பலைத் தகண்ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத் தெழு காமு றுகாளையர்
காதலாற்கழற் சேவடி கைதொழ
அம்பலத்துறை வானடியார்க் கடையா வினையே. ௪

தொல்லையாரமு துண்ணை நஞ்சுண்டதோர்
தூமணிமிட றுபகுவாயதோர்
பல்லையார்தலை யிற்பலியேற்றுழல் பண்டரங்கா
தில்லையார்தொழு தேத்து சிற்றமபலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தானெரியம்மதி லெய்தவனே. ௫

ஆகந்தோயணி கொன்றையாயனல்
அங்கையாயம ரர்க்கமராவுமை
பாகந்தோய்பகவா பலியேற்றுழல் பண்டரங்கா
மாகந்தோய்பொழில் மல்குசிற்றம்பலம்
மன்னினாய்மழு வாளினாயழல்
நாகந்தோயரையாய் அடியாரை நண் ணாவினையே. ௬

சாதியார்பளிங் கின்னெடுவெள்ளிய
சங்கவார்குழை யாய்திகழப்படும்
வேதியாவிகிர்தா விழவாரணி தில்லைதன்னுள்

Koviloor Digital Library

சிவமயம்

ஆதியாய்க்கிட மாயசிற்றம்பலம்
அங்கையால்தொழ வல்லடியார்களை
வாதியாதகலுந் நலியாமலி தீவினையே. எ

வேயினார்பணைத் தோளியோடாடலை
வேண்டினாய்விகிர் தாவுயிர்கட்கமு
தாயினாயிடு காட்டெரி யாடமைர்ந்தவனே
தீயினார்கணையாற் புரமூன்றெய்த
செம்மையாய்திகழ் கின்றசிற்றம்பலம்
மேயினாய்கழ லேதொழு தெய்துதும் மேலுலகே. அ

தாரினார்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவாநல்ல
தேரினார்மறுகிற் றிருவாரணி தில்லைதன்னுட்
சீரினால்வழிபா டொழியாததோர்
செம்மையாலழ காயசிற்றம்பலம்
ஏரினாலமர்ந்தா யுனசீரடி யேத்துதுமே. கூ

வெற்றரையுழல்வார் துவராடைய
வேடத்தாரவர்கள் ளுரைகொள்ளன்மின்
மற்றவருலகின் னவலம்மவை மாற்றகில்லார்
கற்றவர்தொழு தேத்துசிற்றம் பலங்
காதலாற்கழற் சேவடிகைதொழ
உற்றவருலகின் னுறுதிகொள வல்லவரே. ய

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறுமின்தமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்துசிற்றம்பலத்
தீசனையிசையாற் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லா ருயர்ந்தாரொடுங் கூடுவரே. யக

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்

4. ரோகிணி : திருவிற்குடி வீரட்டம்
பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

வடிகொள் மேனியர் வானமா மதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினருடைபுலி யதளார்ப்பர்
விடைய தேறுமெம் மானமர்ந் தினி துறைவிற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை அருவினை யடையாவே. க

களங்கொள் கொன்றையுங் கதிர்விரி மதியமுங் கடிகமழ்சடைக்கேற்றி
உளங்கொள் பத்தர்பா லருளிய பெருமையர் பொருகரி யுரிபோர்த்து
விளங்கு மேனிய ரெம்பெரு மானுறை விற்குடி வீரட்டம்
வளங்கொள் மாமலரால்நினைந் தேத்துவார் வருத்தம தறியாரே. உ

கரிய கண்டத்தர் வெளியவெண் பொடியணி மார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை யிடம்பெறக் காட்டகத் தாடிய வேடத்தர்
விரியு மாமலர்ப் பொய்கைசூழ் மதுமலி விற்குடி வீரட்டம்
பிரிவி லாதவர் பெருந்தவத் தோரெனப் பேணுவ ருலகத்தே. ௩

பூதஞ் சேர்ந்திசை பாடல ராடலர் பொலிதர நலமார்ந்த
பாதஞ் சேரிணைச் சிலம்பினர் கலம்பெறு கடல்எழு விடமுண்டார்
வேத மோதிய நாவுடை யானிடம் விற்குடி வீரட்டம்
சேரு நெஞ்சினார்க் கல்லதுண் டோபிணி தீவினை கெடுமாறே. ச

கடிய ஏற்றினர் கனலன மேனிய ரனலெழ வூர்மூன்றும்
இடிய மால்வரை கால்வளைத் தான்றன தடியவர் மேலுள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப் பானுறை விற்குடி வீரட்டம்
படிய தாகவே பரவுமின் பரவினுற் பற்றறு மருநோயே. ரு

பெண்ணொர் கூறினர் பெருமையர் சிறுமறிக் கையினர் மெய்யார்ந்த
அண்ண லன்புசெய் வாரவர்க் கெளியவ ரரியவ ரல்லார்க்கு
விண்ணி லார்பொழில் மல்கிய விற்குடி வீரட்டம்
எண்ணி லாவிய சிந்தையி னார்தமக் கிடர்களவந் தடையாவே. சா

Koviloor Digital Library

உ
சிவமயம்

இடங்கொள் மாகட லிலங்கையர் கோன்தனை யிகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரை யானுரை யார்தரு பொருளின னிருளார்ந்த
விடங்கொள் மாமிட றுடையவ னுறைபதி விற்குடி வீரட்டம்
தொடங்கு மாறிசை பாடிநின் றார்தமைத் துன்ப நோ யடையாவே. எ

செங்கண் மாலொடு நான்முகன் தேடியுந் திருவடி யறியாமை
எங்கு மாரெரி யாகிய இறைவனை யறைபுனல் முடியார்ந்த
வெங்கண் மால்வரைக் கரியுரிந் துகந்தவன் விற்குடி வீரட்டம்
தங்கை யால்தொழு தேத்தவல் லாரவர் தவமல்கு குணத்தாரே. அ

பிண்ட முண்டுழல் வார்களும் பிரிதுவ ராடைய ரவர் வார்த்தை
பண்டு மின்றுமோர் பொருளெனக் கருதன்மின் பரிவுறு வீர்கேண்மின்
விண்ட மாமலர்ச் சடையவ னிடமெனில் விற்குடி வீரட்டம்
கண்டு கொண்டடி காதல்செய் வாரவர் கருத்துறுங் குணத்தாரே. கூ

விலங்க லேசிலையிடமென வுடையவன் விற்குடி வீரட்டத்
திலங்கு சோதியை யெம்பெரு மான்றனை யெழில் திகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழிற்காழியுள் ஞானசம்பந்தனற் றமிழ்மாலை
வலங்கொ டேயிசை மொழியுமின் மொழிந்தக்கால் மற்றது வரமாமே. ௰

திருச்சிற்றம்பலம்

5. மிருகசீரிடம் : திருஆலவாய்
பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே. க

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆலவாயான் திருநீறே. உ

Koviloor Digital Library

உ

சிவமயம்

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆலவாயான் திருநீறே. ௩

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆலவாயான் திருநீறே. ௪

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே ௫

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. ௬

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. ௭

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. ௮

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. ௯

Koviloor Digital Library

உ
சிவமயம்

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மாலவாயான் திருநீறே. ௰

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. ௰க

திருச்சிற்றம்பலம்

6. திருவாதிரை : திருக்கோவலூர் வீரட்டம் : திருவிராகம் பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர் தனுள்
விடையதேறுங் கொடியினன் வீரட்டானஞ் சேர்துமே. க

கரவலாளர் தம்மனைக் கடைகள் தோறுங் கால்நிமிர்த்
திரவலாழி நெஞ்சமே யினியதெய்த வேண்டில் நீ
குரவமேறி வண்டினங் குழலொடியாழ்செய் கோவலூர்
விரவிநாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே. உ

உள்ளத்தீரே போதுமின் னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற் காலிட்டிங் கவலத்து ளழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினன் வீரட்டானஞ் சேர்துமே. ங

கனைகொளிருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனையபலவு மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்
பனைகளுலவு பைம்பொழிற் பழனஞ்சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான் வீரட்டானஞ் சேர்துமே. ச

Koviloor Digital Library

உ
சிவமயம்

உளங்கொள் போக முய்த்திடா ருடம்பிழந்த போதின்கண்
துளங்கிநின்று நாடொறுந் துயரலாழி நெஞ்சமே
வளங்கொள் பெண்ணை வந்துலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விளங்குகோவ ணத்தினுள் வீரட்டானஞ் சேர்துமே. ரு

கேடுமூப்புச் சாக்காடு கெழுமிவந்து நாள்தொறும்
ஆடுபோல நரைகளா யாக்கைபோக்க தன்றியும்
கூழநின்று பைம்பொழிற் குழகன்கோவ லூர்தனுள்
வீடுகாட்டு நெறியினுள் வீரட்டானஞ் சேர்துமே. சா

உரையும்பாட்டுந் தளர்வெய்தி யுடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி நகுவர்நமர்க ளாதலால்
வரைகொள்பெண்ணை வந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர்வெண் ணீற்றினுள் வீரட்டானஞ் சேர்துமே. எ

ஏதமிக்க மூப்பினோ டிருமலீளை யென்றிவை
ஊதலாக்கை யோம்புவீ ருறுதியாவ தறிதிரேல்
போதில்வண்டு பண்செயும் பூந்தண்கோவ லூர்தனுள்
வேதமோது நெறியினன் வீரட்டானஞ் சேர்துமே. அ

ஆறுபட்ட புன்சடை யழகனாயி ழைக்கொரு
கூறுபட்ட மேனியான் குழகன்கோவ லூர்தனுள்
நீறுபட்ட கோலத்தான் நீலகண்ட னிருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானஞ் சேர்துமே. கூ

குறிகொளாழி நெஞ்சமே கூறைதுவரிட் டார்களும்
அறிவிலாத அமணர்சொல் லவத்தமாவ தறிதியேல்
பொறிகொள்வண்டு பண்செயும் பூந்தண்கோவ லூர்தனுள்
வெறிகொள்கங்கை தாங்கினன் வீரட்டானஞ் சேர்துமே. ய

கழியொடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
விழிகள் தீரச் சொன்னசொற் பாவநாச மாதலால்
அழிவிலீர்கொண் டேத்துமி னந்தண்கோவ லூர்தனுள்
விழிகொள் பூதப் படையினுள் வீரட்டானஞ் சேர்துமே. யக

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ

சிவமயம்

7. புனர்பூசம் : திருஅண்ணாமலை
பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. ௧

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. ௨

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. ௩

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணாமலை யதுவே. ௪

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே. ௫

பெருகும்புன லண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக் குறுநோயடையாவே. ௬

Koviloor Digital Library

உ
சிவமயம்

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணுமலை யதுவே. எ

ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிட மண்ணுமலை யதுவே. அ

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே. கூ

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின் றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின் அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே. ம

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. மக

திருச்சிற்றம்பலம்

8. பூசம் : திருக்குறுக்கை வீரட்டம்
திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

ஆதியிற் பிரமனார் தாமர்ச்சித்தா ரடியிணைக் கீழ்
ஓதிய வேதநாவ ருணருமா றுணரலுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக் குறுக்கை வீரட்டனாரே. க

Koviloor Digital Library

உ
சிவமயம்

நீற்றினை நிறையப்பூசி நித்தலு நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டு மந்தண னுரைக் கொல்வான்
சாற்றுநா ளற்றதென்று தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே. உ

தழைத்ததோ ராத்தியின் கீழ்த்தா பர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக் கறந்து கொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன் றதைதாளைப் பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோ ரமுதமீந்தார் குறுக்கை வீரட்டனாரே. ௩

ஏறுடனேழடர்த்தா னெண்ணியாயிரம் பூக் கொண்டு
ஆறுடைச் சடையினானை யர்ச்சித்தா ரடியிணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணையீண்டக்
கூறுமோ ராழியீந்தார் குறுக்கை வீரட்டனாரே. ச

கல்லினா லெறிந் துகஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறு ணமே நீள்விசும் பாளவைத்தார்
எல்லியாங் கெரிகையேந்தி யெழிறிகழ் நட்டமாடிக்
கொல்லியாம் பண்ணுகந்தார் குறுக்கை வீரட்டனாரே. ரு

காப்பதோர் வில்லுமம்புங் கையதோ ரிறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ றொழுகத்தன் கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறக்கை வீரட்டனாரே. சா

அணாங்குமை பாகமாக வடக்கிய வாதிமூர்த்தி
வணாங்குவா ரிடர்களக்கு மருந்துநல் லருந்தவத்த
கணம் புல்லர்க் கருள்கள் செய்து காதலா மடியார்க் கென்றும்
குணாங்களைக் கொடுப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே. எ

எடுத்தன னெழிற்கயிலை யிலங்கையர் மன்னன் றன்னை
அடுத்தொரு வீரலாலூன்ற வலறி ப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைநரம்பால் வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்றவாளை குறுக்கை வீரட்டனாரே. அ

Koviloor Digital Library

உ
சிவமயம்

நெடியமால் பிரமனோடு நீரெனும் பிலயங்கொள்ள
அடியொடு முடியுங்காணா ரருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேடராகித் தூயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர் கொடுத்தார் குறுக்கை வீரட்டனாரே. கூ

ஆத்தமா மயனுமாலு மன்றிமற் றொழிந்ததேவர்
சோத்தமெம் பெருமா னென்று தொழுது தோத்திரங்கள் சொல்லித்
தீர்த்தமா மட்டமீமுன் சீருடை யேழு நாளும்
கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே. ய

திருச்சிற்றம்பலம்

9. ஆமில்யம் : திருப்பழுவூர்
பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய அண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே. க

கோடலொடு கோங்கவை குலாவுமுடி தன்மேல்
ஆடரவம் வைத்தபெரு மானதிட மென்பர்
மாடமலி சூளிகையி லேறிமட வார்கள்
பாடலொலி செய்யமலி கின்றபழு வூரே. உ

வாலிய புரத்திலவர் வேவவிழி செய்த
போலிய வொருத்தர்புரி நூலரிட மென்பர்
வேலியின் விரைக்கமல மன்னமுக மாதர்
பாலனை மிழற்றிநட மாடுபழு வூரே. ங

எண்ணுமொ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழு வூரே. ச

Koviloor Digital Library

உ
சிவமயம்

சாதல்புரி வார்சுடலைதன்னில்நட மாடும்
நாதன்நமை யாளுடைய நம்பனிட மென்பர்
வேதமொழி சொல்லிமறை யாளரிறை வன்றன்
பாதமவை யேத்தநிகழ் கின்றபழு வூரே. ரு

மேவயரு மும்மதிலும் வெந்தழல் விளைத்து
மாவயர வன்றுரிசெய் மைந்தனிட மென்பர்
பூவையை மடந்தையர்கள் கொண்டுபுகழ் சொல்லிப்
பாவையர்கள் கற்பொடு பொலிந்தபழு வூரே. சா

மந்தண மிருந்துபுரி மாமடிதன் வேள்வி
சிந்தவிளை யாடுசிவ லோகனிட மென்பர்
அந்தணர்க ளாகுதியி லிட்டஅகில் மட்டார்
பைந்தொடிநன் மாதர்சுவ டொற்றுபழு வூரே. எ

உரக்கடல் விடத்தினை மிடற்றிலுற வைத்தன்
றரக்கனை யடர்த்தருளு மப்பனிட மென்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி யுண்டு
பரக்குறு புனற்செய்விளை யாடுபழு வூரே. அ

நின்றநெடு மாலுமொரு நான்முகனு நேட
அன்றுதழ லாய்நிமிரு மாதியிட மென்பர்
ஒன்றுமிரு மூன்றுமொரு நாலுமுணர் வார்கள்
மன்றினி லிருந்துடன் மகிழ்ந்தபழு வூரே . கூ

மொட்டையம ணாதர்துகில் மூடுவிரி தேரர்
முட்டைகண் மொழிந்தமுனி வான்றனிட மென்பர்
மட்டைமலி தாழையிள நீரதிசை பூகம்
பட்டையொடு தாறுவிரி கின்றபழு வூரே . ௰

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தமிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ

சிவமயம்

10. மகம் : திருஅதிகைவீரட்டானம்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்டதொடையலா றுடும்வீரட் டானத்தே. . க

அரும்புங் குரும்பையு மலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டுன்கை யனல்வீசிச்
சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பு மதிகையு ளாடும்வீரட் டானத்தே. உ

ஆட லழல்நாக மரைக்கிட் டசைத் தாடப்
பாடல் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேல் மதிதோய் அதிகையுள்
வேடம் பலவல்லா றுடும் வீரட் டானத்தே. ந

எண்ணா ரெயிலெய்தா னிறைவ னனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரம னதிகையுள்
விண்ணோர் பரவநின் றுடும்வீரட் டானத்தே. ச

கரிபுன் புறமாய கழிந்தா ரிடுகாட்டில்
திருநின் றொருகையால் திருவா மதிகையுள்
எரியேந் தியபெருமா னெரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே. ரு

துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாய லுமையோ டிசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே. சா

Koviloor Digital Library

உ
சிவமயம்

பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி
பூதம் படைசூழப் புலித்தோலுடையாகக்
கீத முமைபாடக் கெடில வடபாக்கம்
வேத முதல்வனின் றுடும்வீரட் டானத்தே. ௭

கல்லார் வரையரக்கன் தடந்தோள் கவின்வாட
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் தலைசூடி
வில்லா லெயிலெய்தா னுடும்வீரட் டானத்தே. ௮

நெடியான் நான்முகனு நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பனைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் மதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும்வீரட் டானத்தே. ௯

அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடனேந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வா துமையோ டுடனாகி
விரைதோ யலர்தாரா னுடும்வீரட் டானத்தே. ௰

ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

11. பூரம் : திருக்கண்டியூர் வீரட்டம்
பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

வினவினேனறி யாமையில்லுரை செய்ம்மினீரருள் வேண்டுவீர்.
கனைவிலார் புனற் காவிரிக்கரை மேயகண்டியூர் வீரட்டன்.
தனமுனே தனக்கின்மையோ தம ராயினாரண்ட மாளத்தான்.
வனனில் வாழ்க்கை கொண்டாடிப் பாடியிவ் வையமாப்பலி தேர்ந்ததே. ௧

Koviloor Digital Library

உ
சிவமயம்

உள்ளவாறெனக் குரைசெய்மின்னுயர் வாயமாதவம் பேணுவீர்,
கள்ளவிழ் பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத் துறை காதலான்,
பிள்ளைவான்பிறை செஞ்சடைம்மிசை வைத்ததும் பெரு நீரொலி,
வெள்ளந்தாங்கிய தென்கொலோ மிகுமங்கையாளுட னுகவே. உ

அடியராயினீர் சொல்லுமின்னறி கின்றிலேன்னரன் செய்கையைப்
படியெலாந்தொழு தேத்துகண்டியூர் வீரட்டத்துறை பான்மையான்,
முடிவுமாய் முதலா யிவ்வைய முழுதுமாயழ காயதோர்,
பொடியதார் திரு மார்பினிற்புரி நூலும் பூண்டெழு பொற்பதே. ௩

பழையதொண்டர்கள் பகருமின்பல வாயவேதியன் பான்மையைக்,
கழையுலாம்புனல் மல்கு காவிரி மன்னுகண்டியூர் விரட்டன்,
குழையொர் காதினிற் பெய்துகந்தொரு குன்றின் மங்கை வெருவுறப்,
புழைநெடுங்கைநன் மாவுரித்தது போர்த்துகந்த பொலிவதே. ச

விரவிலாதுமைக் கேட்கின்றேனடி விரும்பியாட்செய்வீர் விளம்புமின்,
கரையெலாந்திரை மண்டுகாவிரிக் கண்டியூருறை வீரட்டன்,
முரவமொந்தை முழா வொலிக்க முழங்கு பேயொடுங் கூடிப்போய்ப்,
பரவுவானவர்க் காகவார்கடல் நஞ்சமுண்ட பரிசதே. ரு

இயலுமாறெனக் கியம்புமின்னிறை வன்னுமாய் நிறைசெய்கையைக்,
கயல்நெடுங் கண்ணினார்கள் தாம் பொலி கண்டியூருறை வீரட்டன்,
புயல்பொழிந்திழி வானுளோர் களுக்காகவன் றயன் பொய்ச்சிரம்,
அயனகவவ் தரிந்துமற்றதி லூணுகந்த வருத்தியே. சா

திருந்து தொண்டர்கள் செப்புமின்மிகச் செல்வன்றன்னது திறமெலாம்,
கருந்தடங் கண்ணினார்கள் தாந்தொழு கண்டியூருறை வீரட்டன்,
இருந்து நால்வரொ டால் நிழலற முரைத்ததும்மிகு வெம்மையார்,
வருந்தவன் சிறை யாலம் மாமதில் மூன்று மாட்டியவண்ணமே. எ

நாவிரித்தரன் தொல்புகழ்பல பேணுவீரிறை நல்குமின்,
காவிரித்தடம் புனல்செய்கண்டியூர் வீரட்டத்துறை கண்ணுதல்,
கோவிரிப்பயன் ஆனஞ்சாடிய கொள்கையுங் கொடிவரைபெற,
மாவரைத்தலத் தாலரக்கனை வலியைவாட்டிய மாண்பதே . அ

Koviloor Digital Library

உ
சிவமயம்

பெருமையேசர ணுகவாழ்வுறு மாந்தர்காளிறை பேசுமின்
கருமையார் பொழில் சூழந்தண் வயற் கண்டியூருறை வீரட்டன்
ஒருமையாலுயர் மாலுமற்றை மலரவன்னுணர்ந் தேத்தவே
அருமையாலவ ருக்குயர்ந்தெரி யாகி நின்ற அத்தன்மையே. ௯

நமரெழுபிறப் பறுக்குமாந்தர்காள் நவிலுமின்னுமைக் கேட்கின்றேன்.
கமரழிவயல் சூழுந்தண்புனற் கண்டியூருறை வீரட்டன்.
தமரழித்தெழு சாக்கியச்சம ணுதரோது மதுகொளா,
தமரரானவ ரேத்த அந்தகன் தன்னைச் சூலத்தி லாய்ந்ததே. ௰

கருத்தனைப் பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத்துறைகள்வனை
அருத்த னைத்திற மடியார்பால்மிகக் கேட்டுகந்த வினவுரை
திருத்த மாந்திகழ் காழிஞானசம் பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகி லும் பலர்களாகி லுமுரை செய்வாருயர்ந்தார்களே. ௰௧

திருச்சிற்றம்பலம்

12. உத்திரம் : திருவானைக்கா
பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மழையார் மிடறு மழுவா ளுடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவா ரும்வெண்நா வலின்மே வியஎம்
அழகா எனுமா யிழையா ளவளே. ௧

கொலையார் கரியின் னுரிமூ டியனே
மலையார் சிலையா வளைவித் தவனே
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
நிலையா அருளா யெனுநே ரிழையே. ௨

காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்
பாலோ டுநெய்யா டியபால் வணனே
வேலா டுகையா யெம்வெண்நா வலுளாய்
ஆலார் நிழலா யெனுமா யிழையே. ௩

Koviloor Digital Library

உ
சிவமயம்

சுறவக் கொடிகொண் டவனீ றதுவாய்
உறநெற் றிவிழித் தவெழுத் தமனே
விறல்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமெனு யிழையே. ௪

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண்நா வலுளாய்
அங்கத் தயர்வா யினளா யிழையே. ௫

குன்றே யமர்வாய் கொலையார் புலியின்
தன்தோ லுடையாய் சடையாய் பிறையாய்
வென்றுய் புரமூன் நறவெண்நா வலுளே
நின்று யருளா யெனுநே ரிழையே. (சூ. ௭)

மலையன் றெடுத்த அரக்கன் முடிதோள்
தொலையவ் விரலூன் றியதூ மழுவா
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
அலசா மனல்கா யெனுமா யிழையே . ௮

திருவார் தருநா ரணன்நான் முகனும்
மருவா வெருவா அழலாய் நிமிர்ந்தாய்
விரையா ரும்வெண்நா வலுள்மே வியளம்
அரவா எனுமா யிழையா ளவளே . ௯

புத்தர் பலரோ டமண்பொய்த் தவர்கள்
ஒத்தவ் வுரைசொல் லிவையோ ரகிலார்
மெய்த்தே வர்வணங் கும்வெண்நா வலுளாய்
அத்தா அருளா யெனுமா யிழையே. ௰

வெண்நா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிவையா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்

13. அஸ்தம் : திருவையாறு
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. க

மதியொன் றியகொன் றைவடத்தன்
மதியொன் றவுதைத் தவர்வாழ்வும்
மதியின் னொடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. உ

கொக்கின் னிறகின் னொடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதையாறே. ௩

சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்காதல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ருமையாறே. ச

உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமந் தலையாறே. ரு

தலையின் தொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்
நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே. சா

Koviloor Digital Library

வரமொன் றியமா மலரோன்றன்
சிரமொன் றையறுத் தவர்சேர்வாம்
வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசே ருமையாறே. எ

வரையொன் றதெடுத் தவரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தருபொன்னித்
திரைதன் னெடுசே ருமையாறே. அ

சங்கக் கயனும் மறியாமைப்
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. கூ

துவரா டையர்தோ லுடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கள்தா மரையானோ
டவர்தா மணையந் தணையாறே. ய

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே. யக

திருச்சிற்றம்பலம்

14. சித்திரை : திருப்பேணுபெருந்துறை
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பைம்மாநாகம் பன்மலர்கொன்றை பன்றிவெண்கொம்பொன்று பூண்டு.
செம்மாந்தையம் பெய்கென் றுசொல்லிச் செய்தொழில்பேணியோர் செல்வர்,
அம்மானோக்கிய யந்தளிர்மேனி யரிவையோர்பாக மமர்ந்த,
பெம்மானல்கிய தொல்புகழாளர் பேணு பெருந்துறையாரே. க

Koviloor Digital Library

உ
சிவமயம்

மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய்நின்ற மூர்த்தி
பாவங்கள்தீர்தர நல்வினைநல்கிப் பல்கணம்நின்று பணியச்
சாவமதாகிய மால்வரைகொண்டு தண்மதிள்மூன்று மெரித்த
தேவர்கள்தேவ ரெம்பெருமானுர் தீதில் பெருந்துறையாரே. உ

செய்பூங்கொன்றை கூவிளமாலை சென்னியுட்சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங்கோதை மாதுமைபாகங் கூடியோர்பீடுடை வேடர்
கைபோனுன்ற கனிகுலைவாழை காய்குலையிற்கமு கீனப்
பெய்பூம்பாளை பாய்ந்திழிதேறல் பில்கு பெருந்துறையாரே. ௩

நிலனெடுவானு நீரோடுதீயும் வாயுவுமாகியோ ரைந்து
புலனெடுவென்று பொய்மைகள்தீர்ந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி
நலனெடுதீங்குந் தானலதின்றி நன்கெழுசிந்தைய ராகி
மலனெடுமாசு மில்லவர்வாழு மல்கு பெருந்துறையாரே. ௪

பணிவாயுள்ள நன்கெழுநாவின் பத்தர்கள்பத்திமை செய்யத்
துணியார்தங்க ளுள்ளமிலாத சுமடர்கள்சோதிப் பரியார்
அணியார்நீல மாகியகண்ட ரரிசிலுரிஞ்சு கரைமேல்
மணிவாய்நீலம் வாய்கமழ்தேறல் மல்கு பெருந்துறையாரே. ௫

எண்ணுர்தங்கள் மும்மதிள்வேவ ஏவலங்காட்டிய எந்தை
விண்ணேர்சாரத் தன்னருள்செய்த வித்தகர்வேத முதல்வர்
பண்ணுர்பாட லாடலருத பசுபதியீசனேர் பாகம்
பெண்ணுனைய வார்சடையண்ணல் பேணுபெருந்துறையாரே. ௬

விழையாருள்ளம் நன்கெழுநாவில் வினைகெடவேதமா றங்கம்
பிழையாவண்ணம் பண்ணியவாற்ருற் பெரியோரேத்தும் பெருமான்
தழையார்மாவின் தாழ்கனியுந்தித் தண்ணரிசில்புடை சூழ்ந்து
குழையார்சோலை மென்னடையன்னங் கூடுபெருந்துறையாரே. ௭

பொன்னங்கானல் வெண்திரைசூழ்ந்த பொருகடல்வேலியிலங்கை.
மன்னனெல்க மால்வரையூன்றி மாமுரணுகமுந்தோளும்.
முன்னவைவாட்டிப் பின்னருள்செய்த மூவிலைவேலுடை மூர்த்தி.
அன்னங்கன்னிப்பேடையொடாடியணவு பெருந்துறையாரே. ௮

Koviloor Digital Library

புள்வாய்போழ்ந்து மாநிலங்கீண்ட பொருகடல்வண்ணனும் பூவின்,
உள்வாயல்லி மேலுறைவானு முணர்வரியானுமை.கேள்வன்,
முள்வாய்தாளின் தாமரைமொட்டின் முகமலரக்கயல் பாயக்,
கள்வாய்நீலங் கண்மலரேய்க்குங் காமர் பெருந்துறையாரே. கூ

குண்டுந்தேருங் கூறைகளைந்துங் கூப்பிலர்செப்பில ராகி
மிண்டும்மிண்டர் மிண்டவைகண்டு மிண்டுசெயாது விரும்பும்
தண்டும்பாம்பும் வெண்டலைசூலந் தாங்கியதேவர்தலைவர்
வண்டுந்தேனும் வாழ்பொழிற்சோலை மல்கு பெருந்துறையாரே. ம

கடையார்மாட நன்கெழுவீதிக் கழுமலவூரன் கலந்து
நடையாரின்சொல் ஞானசம்பந்தன் நல்லபெருந்துறை மேய
படையார்சூலம் வல்லவன்பாதம் பரவியபத்திவை வல்லார்
உடையாராகி யுள்ளமுமொன்றி யுலகினில்மன்னுவர் தாமே. மக

திருச்சிற்றம்பலம்

15. சுவாதி : திருப்பழனம்
பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவும் நக்காவெனவும் நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. க

கண்மேற்கண்ணுஞ் சடைமேற்பிறையு முடையார்காலனைப்
புண்ணாறுதிர மெதிராவோடப் பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்த எந்தைபெருமா னிமவான்மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப் பழனநகராரே. உ

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல்விழிகட்பேய்
உறையுமயான மிடமாவுடையா ருலகர்தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி யாடல்பாடல்செய்
பறையுஞ்சாங்கும் பலியுமோவாப் பழனநகராரே. ங

Koviloor Digital Library

உ

சிவமயம்

உரமன் னுயர்கோட் டுலறுகூகை யலறுமயான த்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையி னறவமேற்ற பெம்மானெமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன் பழனநகராரே. ச

குலவெஞ்சிலையான் மதில்மூன்றெரித்த கொல்லேறுடையண்ணல்
கலைமயிலுங் குயிலும்பயிலுங் கடல்போற்காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள் திரைமுன்சேர்க்கும் பழனநகராரே. ரு

வீளைக்குரலும் விளிசங்கொலியும் விழவினொலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப் பொடியாமதிலெய்தார்
ஈளைப்படுகி லிலையார்தெங்கிற் குலையார்வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப் பழனநகராரே. சா

பொய்யாமொழியார் முறையாலேத்திப் புகழ்வார்திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல் சேர்ந்தஅகலத்தார்
கையாடலினர் புனலான்மல்கு சடைமேற்பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார் பழனநகராரே. எ

மஞ்சோங்குயர முடையான்மலையை மாருயெடுத்தான்தோள்
அஞ்சொடஞ்சு மாறுநான்கு மடரவூன்றினர்
நஞ்சார்சுடலைப் பொடிநீறணிந்த நம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள் கழனிசூழ்ந்த பழனநகராரே. அ

கடியார்கொன்றைச் சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூ வடியாலுலகை முழுதுந்தாவிய
நெடியான்நீள்தா மரைமேலயனும் நேடிக்காணாத
படியார்பொடியா டகலமுடையார் பழனநகராரே. கூ

கண்டான்கழுவா முன்னேயோடிக் கலவைக்கஞ்சியை
உண்டாங்கவர்க ளுரைக்குஞ்சிறுசொல் லோரார்பாராட்ட
வண்டாமரையின் மலர்மேல்நறவ மதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழும வண்டியாழ்செய்யும் பழனநகராரே. ய

Koviloor Digital Library

உ
சிவமயம்

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணுபுரத்தன் னுள்
நாவுய்த்தனைய திறலால்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான்புழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார்நல்லாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

16. விசாகம் : திருஆரூர்
பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சித்தந் தெளிவீர்காள், அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. ௧

பிறவி யறுப்பீர்காள், அறவ னாரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே. ௨

துன்பந் துடைப்பீர்காள், அன்ப னணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே. ௩

உய்ய லுறுவீர்காள் ஐய னாரூரைக்
கையி னற்றொழ, நையும் வினைதானே. ௪

பிண்ட மறுப்பீர்காள், அண்ட னாரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே. ௫

பாச மறுப்பீர்காள், ஈச னணியாரூர்
வாச மலர்தூவ, நேச மாகுமே. ௬

வெய்ய வினைதீர, ஐய னணியாரூர்
செய்ய மலர்தூவ, வைய முமதாமே. ௭

அரக்க னுண்மையை, நெருக்கி னனூர்
கரத்தி னற்றொழத், திருத்த மாகுமே. ௮

துள்ளு மிருவர்க்கும், வள்ள லாரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே. ௯

Koviloor Digital Library

கடுக்கொள் சீவரை. அடக்கி னூரர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. ௰

சீரூர் சம்பந்தன், ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார், பேறா ரின்பமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

17. அனுஷம் : திருச்சோற்றுத்துறை
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னு தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௧

பாலு நெய்யுந் தயிரும் பயின்றாடித்
தோலு நூலுந் துதைந்த வரைமார்பர்
மாலுஞ் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௨

செய்யர் செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தையல் லாளொர் பாக மாயஎம்
ஐயர் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௩

பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேய வார்பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௪

பிறையு மரவும் புனலுஞ் சடைவைத்து
மறையு மோதி மயான மிடமாக
உறையுஞ் செல்வ முடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௫

Koviloor Digital Library

உ
சிவமயம்

துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகள் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௬

சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்
பாடி யாடிப் பரவு வாருள்ளத்
தாடி சோற்றுத் துறைசென் றடைவோமே. ௭

பெண்ணோர் பாக முடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகங் கலந்த நுதலினார்
எண்ணா தரக்க னெடுக்க வூன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௮

தொழுவா ரிருவர் துயர நீங்கவே
அழலா யோங்கி யருள்கள் செய்தவன்
விழவார் மருகில் விதியால் மிக்கஎம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௯

கோது சாற்றித் திரிவா ரமண்குண்டர்
ஓது மோத்தை யுணரா தெழுநெஞ்சே
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென் றடைவோமே. ௰

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்

18. கேட்டை : திருவேதிகுடி : திருவிராகம்
பண் : சாதாரி

திருச்சிற்றம்பலம்

நீறுவரி யாடரவொ டாமைமன என்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரு மிறைஞ்சுகழ லாதிய ரிருந்த விடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே. க

சொற்பிரிவி லாதமறை பாடிநட மாடுவர்தொ லாணையுரிவை
மற்புரிபு யத்தினிது மேவுவரெந்நாளும் வளர்வானவர் தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமு னயின்றவரி யன்றதொகுசீர்
வெற்பரையன மங்கையொரு பங்கர்நக ரென்பர்திரு வேதிகுடியே. உ

போழுமதி பூணரவு கொன்றைமலர் துன்றுசடை வென்றிபுக மேல்
வாழுநதி தாழுமரு ளாளிரு ளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிர வாளர்திரு மார்பில்விரி நூலர்வரி தோலருடை மேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி யென்பர் திருவேதிகுடியே. ௩

காடர்கரி காலர்கனல் கையரனல் மெய்யருடல் செய்யர்செவியில்
தோடர்தெரி கீளர்சரி கோவணவ ராவணவர் தொல்லை நகர்தான்
பாடலுடை யார்களடி யார்கள்மல ரோடுபுனல் கொண்டுபணிவார்
வேடமொளி யானபொடி பூசியிசை மேவுதிரு வேதிகுடியே. ச

சொக்கர்துணை மிக்கவெயி லுக்கறமுனிந்து தொழுமூவர் மகிழத்
தக்கவருள் பக்கமுற வைத்தஅர னூரினிது தங்குநகர் தான்
கொக்கரவ முற்றபொழில் வெற்றிநிழல் பற்றிவரி வண்டிசைகுலாம்
மிக்கமரர் மெச்சியினி தச்சமிடர் போகநல்கு வேதி குடியே. ரு

செய்யதிரு மேனிமிசைவெண்பொடிய ணிந்துகருமா னுரிவைபோர்த்
தையமிடு மென்றுமட மங்கையொட கந்திரியு மண்ணலிடமாம்
வையம்விலை மாறிடினு மேறுபுகழ் மிக்கழிவி லாதவகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரைசெ யாதஅவர் வேதிகுடியே. சா

Koviloor Digital Library

உ
சிவமயம்

உன்னியிரு போதுமடி பேணுமடிய ரார்தமிட ரொல்க அருளித்
துன்னியொரு நால்வருட னல்நிழலி ருந்ததுணை வன்றனிடமாம்
கன்னியரொ டாடவர்கள் மாமணம்வி ரும்பியரு மங்கலமிக
மின்னியலு நுண்ணிடைநன் மங்கையரியற்றுபதி வேதிகுடியே. எ

உரக்கரநெ ருப்பெழநெ ருக்கிவரை பற்றியவொ ருத்தன்முடிதோள்
அரக்கனைய டர்த்தவ னிசைக்கினிது நல்கியரு ளங்கணனிடம்
முருக்கிதழ்ம டக்கொடிம டந்தையரு மாடவரு மொய்த்தகலவை
விரைக்குழல்மி கக்கமழ விண்ணிசையு லாவுதிரு வேதிகுடியே. அ

பூவின்மிசை யந்தணனொ டாழிபொலி யங்கையனு நேடஎரியாய்த்
தேவுமிவ ரல்லரினி யாவரென நின்றுதிகழ் கின்றவரிடம்
பாவலர்க ளோசையியல் கேள்வியத ருதகொடை யாளர்பயில்வாம்
மேவரிய செல்வநெடு மாடம்வளர் வீதிநிகழ்திரு வேதிகுடியே. கூ

வஞ்சமணர் தேரர்மதி கேடர்தம னத்தறிவி லாதவர்மொழி
தஞ்சமென என்றுமுண ராத அடியார்கருது சைவனிடமாம்
அஞ்சுபுலன் வென்றறுவ கைப்பொருள் தெரிந்தெழு இசைக்கிளவியால்
வெஞ்சின மொழித்தவர்கள் மேவி நிகழ்கின்ற திரு வேதிகுடியே. ம

கந்தமலி தண்பொழில்நன் மாடமிடை காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்க ளென்னநிகழ் வெய்திஇமையோர்
அந்தவுல கெய்தியரசாளுமது வேசரத மாணை நமதே. மக

திருச்சிற்றம்பலம்

19. தலம் : திருக்கண்டியூர் வீரட்டம்
பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

வினவினேனறி யாமையில்லுரை செய்ம்மினீரருள் வேண்டுவீர்,
கனைவிலார் புனற் காவிரிக்கரை மேயகண்டியூர் வீரட்டன்.
தனமுனே தனக்கின்மையோ தம ராயினாரண்ட மாளத்தான்,
வனனில் வாழ்க்கை கொண்டாடிப் பாடியிவ் வையமாப்பலி தேர்ந்ததே. க

Koviloor Digital Library

உ
சிவமயம்

உள்ளவாறெனக் குரைசெய்மின்னுயர் வாயமாதவம் பேணுவீர்,
கள்ளவிழ் பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத் துறை காதலான்,
பிள்ளைவான்பிறை செஞ்சடைம்மிசை வைத்தும் பெரு நீரொலி,
வெள்ளந்தாங்கிய தென்கொலோ மிகுமங்கையாளுட னாகவே. உ

அடியராயினீர் சொல்லுமின்னறி கின்றிலேன்னரன் செய்கையைப்
படியெலாந்தொழு தேத்துகண்டியூர் வீரட்டத்துறை பான்மையான்,
முடிவுமாய் முதலா யிவ்வைய முழுதுமாயழ காயதோர்,
பொடியதார் திரு மார்பினிற்புரி நூலும் பூண்டெழு பொற்பதே. ௩

பழையதொண்டர்கள் பகருமின்பல வாயவேதியன் பான்மையைக்,
கழையுலாம்புனல் மல்கு காவிரி மன்னுகண்டியூர் விரட்டன்,
குழையொர் காதினிற் பெய்துகற்தொரு குன்றின் மங்கை வெருவுறப்,
புழைநெடுங்கைநன் மாவுரித்தது போர்த்துகந்த பொலிவதே. ௪

விரவிலாதுமைக் கேட்கின்றேனடி விரும்பியாட்செய்வீர் விளம்புமின்,
கரையெலாந்திரை மண்டுகாவிரிக் கண்டியூருறை வீரட்டன்,
முரவமொந்தை முழா வொலிக்க முழங்கு பேயொடுங் கூடிப்போய்ப்,
பரவுவானவர்க் காகவார்கடல் நஞ்சமுண்ட பரிசதே. ௫

இயலுமாறெனக் கியம்புமின்னிறை வன்னுமாய் நிறைசெய்கையைக்,
கயல்நெடுங் கண்ணினார்கள் தாம் பொலி கண்டியூருறை வீரட்டன்,
புயல்பொழிந்திழி வானுளோர் களுக்காகவன் றயன் பொய்ச்சிரம்,
அயனகவவ் தரிந்துமற்றதி லூணுகந்த வருத்தியே. ௬

திருந்து தொண்டர்கள் செப்புமின்மிகச் செல்வன்றன்னது திறமெலாம்,
கருந்தடங் கண்ணினார்கள் தாந்தொழு கண்டியூருறை வீரட்டன்,
இருந்து நால்வரொ டால் நிழலற முரைத்ததும்மிகு வெம்மையார்,
வருந்தவன் சிறை யாலம் மாமதில் மூன்று மாட்டியவண்ணமே. ௭

நாவிரித்தான் தொல்புகழ்பல பேணுவீரிறை நல்குமின்,
காவிரித்தடம் புனல்செய்கண்டியூர் வீரட்டத்துறை கண்ணுதல்,
கோவிரிப்பயன் ஆனஞ்சாடிய கொள்கையுங் கொடிவரைபெற,
மாவரைத்தலத் தாலரக்கனை வலியைவாட்டிய மாண்பதே. ௮

Koviloor Digital Library

உ
சிவமயம்

பெருமையேசர ணுகவாழ்வுறு மாந்தர்காளிறை பேசுமின்
கருமையார் பொழில் சூழந்தண் வயற் கண்டியூருறை வீரட்டன்
ஒருமையாலுயர் மாலுமற்றை மலரவன்னுணர்ந் தேத்தவே
அருமையாலவ ருக்குயர்ந்தெரி யாகி நின்ற அத்தன்மையே. ௯

நமரெழுபிறப் பறுக்குமாந்தர்காள் நவிலுமின்னுமைக் கேட்கின்றேன்,
கமழ்வயல் சூழ்ந்தண்புனற் கண்டியூருறை வீரட்டன்,
தமரழித்தெழு சாக்கியச்சம ணுதரோது மதுகொளா.
தமரரானவ ரேத்த அந்தகன் தன்னைச் சூலத்தி லாய்ந்ததே. ௰

கருத்தனைப் பொழில் சூழுங்கண்டியூர் விரட்டத்துறைகள்வனை
அருத்த னைத்திற மடியார்பால்மிகக் கேட்டுகந்த விணுவுரை
திருத்த மாந்திகழ் காழிஞானசம் பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகி லும் பலர்களாகி லுமுரை செய்வாருயர்ந்தார்களே. ௰௧

திருச்சிற்றம்பலம்

20. பூராடம் : திருப்பூந்துருத்தி : திருவிருத்தம் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாலினை மாலுறநின்றான் மலைமக டன்னுடைய
பாலினைப் பான்மதி சூடியைப் பண்புண ரார்மதின்மேல்
போலனைப் போர்விடை யேறியைப் பூந்துருத் திம்மகிழும்
ஆலனை யாதிபு ராணனை நாமடி போற்றுவதே. ௧

மறியுடை யான்மழு வாளினன் மாமலை மங்கையொர்பால்
குறியுடை யான்குண மொன்றறிந் தாரில்லை கூறிலவன்
பொறியுடை வாளர வத்தவன் பூந்துருத் தியுறையும்
அறிவுடை யாதிபு ராணனை நாமடி போற்றுவதே. ௨

மறுத்தவர் மும்மதின் மாயவொர் வெஞ்சிலை கோத்தொரம்பால்
அறுத்தனை யாதைன் கீழனை யால்விட முண்டதனைப்
பொறுத்தனைப் பூதப் படையினைப் பூந்துருத் தியுறையும்
நிறுத்தனை நீல மிடற்றனை யானடி போற்றுவதே. ௩

Koviloor Digital Library

உ
சிவமயம்

உருவினை யூழி முதல்வனை யோதி நிறைந்துநின்ற
திருவினைத் தேசம் படைத்தனைச் சென்றடைந் தேனுடைய
பொருவினை யெல்லாந் துரந்தனைப் பூந்துருத் தியுறையும்
கருவினைக் கண்மூன் றுடையனை யானடி போற்றுவதே. ச

தக்கன்றன் வேள்வி தகர்த்தவன் சார மதுவன் றுகோள்
மிக்கன மும்மதில் வீயவொர் வெஞ்சிலை கோத்தொரம்பால்
புக்கனன் பொன்றிகழ்ந் தன்னதொர் பூந்துருத் தியுறையும்
நக்கனை நங்கள்பி ரான்றனை நானடி போற்றுவதே. ரு

அருகடை மாலையுந் தானுடை யானழ காலமைந்த
உருவுடை மங்கையுந் தன்னொரு பாலுல காயுநின்றான்
பொருபடை வேலினன் வில்லினன் பூந்துருத் தியுறையும்
திருவுடைத் தேச மதியனை யானடி போற்றுவதே. சா

மன்றியுந் நின்ற மதிலரை மாய வகை கெடுக்கக்
கன்றியுந் நின்று கடுஞ்சிலை வாங்கிக் கனலம்பினால்
பொன்றியும் போகப் புரட்டினன் பூந்துருத் தியுறையும்
அன்றியுஞ் செய்தபி ரான்றனை யானடி போற்றுவதே. எ

மின்னிற மிக்க விடையுமை நங்கையொர் பான்மகிழ்ந்தான்
என்னிற மென்றமரர் பெரியா ரின்னந் தாமறியார்
பொன்னிற மிக்க சடையவன் பூந்துருத் தியுறையும்
என்னிற வெந்தைபி ரான்றனை யானடி போற்றுவதே. அ

அந்தியை நல்ல மதியினை யார்க்கு மறிவரிய
செந்தியை வாட்டுஞ் செம்பொன் னினைச்சென் றடைந்தேனுடைய
புந்தியைப் புக்க வறிவினைப் பூந்துருத் தியுறையும்
நந்தியை நங்கள்பி ரான்றனை நானடி போற்றுவதே . கூ

பைக்கையும் பாந்தி விழிக்கையும் பாம்பு சடையிடையே
வைக்கையும் வானிழி கங்கையு மங்கை நடுக்குறவே
மொய்க்கை யரக்கனை யூன்றினன் பூந்துருத் தியுறையும்
மிக்கநல் வேத விகிர்தனை நானடி போற்றுவதே. ய

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

21. உத்திராடம் : திருப்புள்ளிருக்கு வேளூர்
பண் : சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கறையனிடம் புள்ளிருக்கு வேளூரே. க

தையலா ளொருபாகஞ் சடைமேலா ளவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோ ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. உ

வாசநலஞ் செய்திமையோர் நாள்தோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானா ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங்கொருநாளு மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே. ங

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த எரியாடி யுறையுமிடம்
ஆகாயந் தேரோடும் இராவணனை யமரின்கண்
போகாமமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. ச

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. ரு

திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரா னமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தனைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. சா

Koviloor Digital Library

உ
சிவமயம்

அத்தியினீ ருரிமூடி யழகாக அனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானூர் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே. எ

பண்ணொன்ற இசைபாடு மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாழ்நாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. அ

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்ன அகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. கூ

கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையொன் றடாமே
தடுத்தவரெம் பெருமானூர் தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காய்ப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. ய

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன் சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே. யக

திருச்சிற்றம்பலம்

22. திருவோணம் : திருநெய்த்தானம்
பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே. க

Koviloor Digital Library

உ
சிவமயம்

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும்புன லரவும்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்ப்பயில் நெய்த்தானமெ னீரே. உ

பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே. ௩

சுடுநீறணி யண்ணற்சுடர் சூலம்மன லேந்தி
நடுநள்ளிருள் நடமாடிய நம்பன்னுறை யிடமாம்
கடுவாளிள வரவாடுமிழ் கடல்நஞ்சமு துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர் நெய்த்தானமெ னீரே. ச

நுகராரமொ டேலம்மணி செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதண்கரை நிகழ்வாயநெய்த்தான
நகரானடி யேத்தந்நமை நடலையடை யாவே. ரு

விடையார்கொடி யுடையவ்வணல் வீந்தார்வெளை யெலும்பும்
உடையார்நறு மாலைசடை யுடையாரவர் மேய
புடையேபுனல் பாயும்வயல் பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவ ரென்றும்மம ருலகம்மடை யாரே. சா

நிழலார்வயல் கமழ்சோலைகள் நிறைகின்றநெய்த் தானத்
தழலானவ னனலங்கையி லேந்தியழ காய
கழலானடி நாளுங்கழ லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய ரின்றித்தொழு வாரே. எ

அறையார்கட லிலங்கைக்கிறை யணிசேர்கயி லாயம்
இறையாரமு டெடுத்தானிரு பதுதோளிற வூன்றி
நிறையார்புனல் நெய்த்தானன்நல் நிகழ்சேவடி பரவக்
கறையார்கதிர் வாளீந்தவர் கழலேத்துதல் கதியே. அ

Koviloor Digital Library

கோலம்முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி திகழ்வாநெய்த் தானம்
காலம்பெற மலர்நீரவை தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புக ழடியாருட லுறுநோய்நலி யாவே. கூ

மத்தம்மலி சித்தத்திறை மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி பொருளாநினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்னுறை நெய்தான மேத்தும்
சித்தம்முடை யடியாருடல் செறுநோயடை யாவே. ௰

தலமல்கிய புனற்காழியுள் தமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தான மேத்தும்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர் சிவகதியே. ௰க

திருச்சிற்றம்பலம்

23. அவிட்டம் : இராமேச்சுரம்
பண் : பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

திரிதரு மாமணி நாகமாடத் தினைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக் கனி யேந்தியாடு நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்த மிலங்குகான விராமேச் சுரமேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி விமலர் செயுஞ்செயலே. க

பொறிகிளர் பாம்பரை யார்த்தயலே புரிவோ டுமைபாடத்
தெறிகிள ரப்பெயர்ந் தெல்லியாடுந் திறமே தெரிந்துணர்வார்
எறிகிளர் வெண்டிரை வந்துபேரு மிராமேச் சுரமேய
மறிகிளர் மான்மழுப் புல்குகையெம் மணாளர் செயுஞ்செயலே. உ

அலைவளர் தண்புனல் வார்சடைமே லடக்கி யொருபாகம்
மலைவளர் காதலி பாடஆடி மயக்கா வருமாட்சி
இலைவளர் தாழை முகிழ்விரியு மிராமேச்சுர மேயார்
தலைவளர் கோலநன் மாலைசூடுந் தலைவர் செயுஞ் செயலே. ௩

Koviloor Digital Library

உ
சிவமயம்

மாதன நேரிழை யோர்தடங்கண் மலையான் மகள்பாடத்
தேதெரி யங்கையி லேந்தியாடுந் திறமே தெரிந்துணர்வார்
ஏதமி லார்தொழு தேத்திவாழ்த்து மிராமேச் சுரமேயார்
போதுவெண் திங்கள்பைங் கொன்றைசூடும் புனிதர் செயுஞ் செயலே. ௪

சூலமோ டொண்மழு நின்றிலங்கச் சுடுகா டிடமாகக்
கோலநன் மாதுடன் பாடஆடுங் குணமே குறித்துணர்வார்
ஏல நறும்பொழில் வண்டுபாடு மிராமேச் சுரமேய
நீலமார் கண்டமுடையவெங்கள் நிமலர் செயுஞ் செயலே. ௫

கணையிணை வெஞ்சிலை கையிலேந்திக் காமனைக் காய்ந்தவர் தாம்
இணையிணை நோக்கிநல் லாளொடாடு மியல்பின ராகிநல்ல
இணைமலர் மேலன்னம் வைகுகான லிராமேச் சுரமேயார்
அணையிணை புல்கு கரந்தைசூடு மடிகள் செயுஞ் செயலே. ௬

நீரினார் புன்சடை பின்புதாழ நெடுவெண் மதிசூடி
ஊரினார் துஞ்சிருள் பாடியாடு முவகை தெரிந்துணர் வார்
ஏரினார் பைம்பொழில் வண்டுபாடு மிராமேச் சுரமேய
காரினார் கொன்றைவெண் திங்கள் சூடுங் கடவுள் செயுஞ் செயலே. ௭

பொன்றிகழ் சுண்ணவெண் ணீறுபூசிப் புலித்தோ லுடையாக
மின்றிகழ் சோதியர் பாடலாடல் மிக்கார் வருமாட்சி
என்றுநல் லோர்கள் பரவியேத்து மிராமேச் சுரமேயார்
குன்றினு லன்றரக் கன்தடந்தோ ளடர்த்தார் கொளுங் கொள்கையே. ௮

கோவலன் நான்முகன் நோக்கொணுத குழக னழகாய
மேவல னொள்ளெரி யேந்தியாடு மிமையோ ரிறைமெய்ம்மை
ஏவல னார்புகழ்ந் தேத்திவாழ்த்து மிராமேச் சுரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம் மிறைவர் செயுஞ்செயலே. ௯

பின்னெடு முன்னிடு தட்டைச்சாத்திப் பிரட்டே திரி வாரும்
பொன்னெடுஞ் சீவரப் போர்வையார்கள் புறங்கூறல் கேளாதே
இன்னெடுஞ் சோலைவண் டியாழ்முரலு மிராமேச்சுர மேய
பன்னெடு வெண்டலை கொண்டு பூழலும் பரமர் செயுஞ் செயலே. ௰

Koviloor Digital Library

தேவியை வவ்விய தென்னிலங்கை யரையன் திறல் வாட்டி
ஏவியல் வெஞ்சிலை யண்ணல்நண்ணு மிராமேச் சுரத்தாரை
நாவியன் ஞானசம் பந்தன்நல்ல மொழியால் நவின்றேத்தும்
பாவியன் மாலை வல்லாரவர்தம் வினையாயின பற்றறுமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

24. சதயம் : திருக்குறுந்தொகை 5ஆம் திருமுறை சுரம் : திருக்கடம்பந்துறை

திருச்சிற்றம்பலம்

முற்றிலாமுலை யாளிவ ளாகிலும்
அற்றம் தீர்க்கும் அறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றள்ளங்கள் பேதையே. ௧

தனகி ருந்ததொர் தன்மைய ராகிலும்
முனகு தீரத் தொழுதெழு மின்களோ
கனகப் புன்சடை யான்கடம் பந்துறை
நினைய வல்லவர் நீள்விசும் பாள்வரே. ௨

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே. ௩

பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை
வண்ண நன்மல ரான்பல தேவரும்
கண்ண னும்மறி யான்கடம் பந்துறை
நண்ண நம்வினை யாயின நாசமே. ௪

மறைகொண் டம்மனத் தானை மனத்துளே
நிறைகொண் டநெஞ்சி னுள்ளுற வைம்மினோ
கறைகண்டன் னுறை யுங்கடம் பந்துறை
சிறைகொண் டவ்வினை தீரத் தொழுமினே. ௫

Koviloor Digital Library

உ
சிவமயம்

நங்கை பாகம்வைத்த நறுஞ் சோதியைப்
பங்க மின்றிப் பணிந்தெழு மின்களோ
கங்கைச் செஞ்சடையான் கடம்பந்துறை
அங்க மோதி அரனுறை கின்றதே. சா

அரிய நான்மறை ஆறங்கமாய் ஐந்து
புரியன் தேவர்கள் ஏத்தநஞ் சுண்டவன்
கரிய கண்டத்தி னன் கடம்பந்துறை
உரிய வாறு நினைமட நெஞ்சமே. எ

பூமென் கோதை உமையொரு பாகனை
ஓமஞ் செய்தும் உணர்மின் கள்உள்ளத்தால்
காமற் காய்ந்தபிரான்கடம் பந்துறை
நாமம் ஏத்தநம் தீவினை நாசமே. அ

பார ணங்கி வணங்கிப் பணிசெய
நார ணன்பிர மன்னறி யாததோர்
காரணன் கடம் பந்துறை மேவிய
ஆரணங் கொரு பாலுடை மைந்தனே. கூ

நூலால் நன்குய் நினைமின்கள் நோய்கெடப்
பாலான் ஐந்துடன் ஆடும் பரமனூர்
காலான் ஊன்றுகந் தான்கடம்பந்துறை
மேலா னுஞ்செய்த வல்வினை விடுமே . ய

திருச்சிற்றம்பலம்

25. பூரட்டாதி : திருக்கேதீச்சுரம்
பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணரவாஅன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங்கைதொழக் கடுவினையடையாவே. க

Koviloor Digital Library

உ
சிவமயம்

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி லெழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர்வினைதானே. உ

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினறை கழல்சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையினுழல்பவருயர் தருமாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சர மடைபவர்க் கருவினையடையாவே. ௩

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிகளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள்சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்மொய்த்தெழும் வினைபோமே. ௪

நல்லராற்றவும் ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே. ௫

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப் பொருந்த வைத்தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்த நீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே. ௬

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனுர் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறுந்துதிசெய அருள்செய்கே தீச்சர மதுதானே. ௭

தென்னி லங்கையர் குலபதிமலைநலிந் தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனுர் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. ௮

Koviloor Digital Library

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலாவித்தக மென்னுகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தஎம் பெருமானே. ௯

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச்சமணாதர்
எத்த ராகிநின்றுண்பவ ரியம்பிய யேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சர மடைமின்னே. ௰

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடுளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

26. உத்திரட்டாதி : திருக்குறுந்தொகை
திறம் : திருவாட்போக்கி

திருச்சிற்றம்பலம்

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நிழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே. ௧

விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரங் கேட்கும்வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே. ௨

வந்திவ் வாறு வளைத் தெழு தூதுவர்
உந்தியோடி நரகத் திடாமுனம்
அந்தியின்னொளி தாங்கும்வாட் போக்கியார்
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரே. ௩

Koviloor Digital Library

உ
சிவமயம்

கூற்றம் வந்து குமைத்திடும் போதினல்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும் வாட்போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே. ௪

மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட்போக்கியார்க்
கூறி யூறி யுருகுமென் னுள்ளமே. ௫

கான மோடிக் கடிதெழு தூதுவர்
தான மோடு தலைபிடி யாமுனம்
ஆனஞ் சாடி யுகந்தவாட் போக்கியார்
ஊன மில்லவர்க் குண்மையில் நிற்பரே. ௬

பார்த்துப் பாசம் பிடித்தெழு தூதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை யடக்கும் வாட்போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே. ௭

நாடி வந்து நமன்தமர் நல்லிருள்
கூடி வந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாடல் உகந்தவாட் போக்கியை
வாடி யேத்தநம் வாட்டந் தவிருமே. ௮

கட்ட றுத்துக் கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்
கிட்ட மாகி இணையடி யேத்துமே. ௯

இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே. ௰

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்

27. ரேவதி : திருஈங்கோய்மலை
உபயம் பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவி லெரிகொண்டாடுங் கடவுளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சார லீங்கோய்மலையாரே. க

சூலப்படையொன் றேந்தியிரவிற் சுடுகாடிடமாகக்
கோலச்சடைகள் தாழக்குழல்யாழ் மொந்தைகொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண ஆடும்பரமனார்
ஏலத்தொடுநல் லிலவங்கமழு மீங்கோய்மலையாரே. உ

கண்கொள்நுதலார் கறைகொள்மிடற்றார் கரியினுரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார்விடையார் கொடியார்வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும் பெம்மானெமையாள்வார்
எண்குமரியுந் திரியுஞ்சார லீங்கோய்மலையாரே. ௩

மறையின்னிசையார் நெறிமென்கூந்தல் மலையான்மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவுங் குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங் கழலுமார்ப்பப் படுகாட்டெரியாடும்
இறைவர்சிறைவண் டறையுஞ்சார லீங்கோய்மலையாரே. ௪

நொந்தசுடலைப் பொடிநீறணிவார் நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள் பலவுந்நிலவு கமழ்புன்சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும்
எந்தம்மடிகள் கடிகொள்சார லீங்கோய்மலையாரே. ௫

நீருரகல முடையார்நிரையார் கொன்றையரவோடும்
ஆரூர்சடையா ரயில்வெங்கணையா லவுணர்புரமூன்றும்
சீருவெரிசெய் தேவர்பெருமான் செங்கணடல்வெள்ளை
ஏரூர்கொடியா ருமையாளோடு மீங்கோய்மலையாரே. ௬

Koviloor Digital Library

உ

சிவமயம்

வினையாயினதீர்த் தருளேபுரியும் விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல் மதியஞ்சூடும் நம்பர்நலமல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான் தலையோடனலேந்தும்
எனையாளுடையா னுமையாளோடு மீங்கோய்மலையாரே. ௭

பரக்கும்பெருமை இலங்கையென்னும் பதியிற்பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளு மணியார்விரல்தன்னால்
நெருக்கியடர்த்து நிமலாபோற்றி யென்றுநின்றேத்த
இரக்கம்புரிந்தா ருமையாளோடு மீங்கோய்மலையாரே. ௮

வரியார்புலியி னுரிதோலுடையான் மலையான்மகளோடும்
பிரியாதுடனு யாடல்பேணும் பெம்மான்றிருமேனி
அரியோடயனு மறியாவண்ண மளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்த எங்கள்பெருமா னீங்கோய்மலையாரே. ௯

பிண்டியேன்று பெயராநிற்கும் பிணங்குசமணரும்
மண்டைகலனுக் கொண்டுதிரியும் மதியில்தேரரும்
உண்டியுயிரு ருரைகள்கொள்ளா துமையோடுடனாகி
இண்டைச்சடையா னிமையோர்பெருமா னீங்கோய்மலையாரே. ௰

விழவாரொலியு முழவுமோவா வேணுபுரந்தன் னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சே ரணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூ ழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார் கவலைகளைவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

நட்சத்திரம் 27			சூக்கும்லிங்கம் ஆகிய வீரட்டம் அ(8), சத்தத்தானம்எ(7), வலியாதியர் (நவக்கோள்) கூ (9) நவநாயத்தலம் சந்தித்தானம் ௩ (3)
க	அச்வதி	- வீரபத்திரன்	- திருப்பறியல் வீரட்டம்
உ	பரணி	- காகாலன்	- திருக்கடவூர் வீரட்டம்
௩	ரோகிணி	- சலந்தாரி	- திருவிற்குடி வீரட்டம்
ச	திருவாதிரை	- அந்தகாரி	- திருக்கோவலூர் வீரட்டம்
ரு	பூசம்	- காமாரி	- திருக்கொறுக்கை வீரட்டம்
சா	ஆயில்யம்	- கெஜாரி	- திருப்பழுவூர் வீரட்டம்
எ	மகம்	- புராரி	- திருவதிகை வீரட்டம்
அ	பூரம்	- வைரவர்	- திருக்கண்டியூர் வீரட்டம்
கூ	அஸ்தம்	- ஞாயிறு	- திருவையாறு
ய	சுவாதி	- திங்கள்	- திருப்பழனம்
யக	அநுடம்	- செவ்வாய்	- திருச்சோற்றுத்துறை
யஉ	கேட்டை	- புதன்	- திருவேதிகுடி
ய௩	மூலம்	- வியாழன்	- திருக்கண்டியூர்
யச	பூராடம்	- வெள்ளி	- திருப்பூந்துருத்தி
யரு	திருவோணம்	- சனி	- திருநெய்த்தானம்
யசா	கார்த்திகை	- ரவி	- திருத்தில்லை
யஎ	மிருகசீரிடம்	- மதி	- திருஆலவாய்
யஅ	புனர்பூசம்	- சேய்	- திருஅண்ணாமலை
யகூ	உத்தரம்	- மால்	- திருஆனைக்கா
உய	சித்திரை	- பொன்	- திருப்பெருந்துறை
உயக	விசாகம்	- கவி	- திருவாரூர்
உயஉ	உத்திராடம்	- காரி	- திருப்புள்ளிருக்கு வேளூர்
உய௩	அவிட்டம்	- ராகு	- திருஇராமேச்சுரம்
உயச	பூரட்டாதி	- கேது	- திருகேதீச்சுரம்
உயரு	சதயம்	- சரம்	- திருக்கடம்பர் கோயில்
உயசா	உத்திரட்டாதி	- திரம்	- திருஜயடிகூர்மலை
உயஎ	ரேவதி	- உபயம்	- திருஈங்கோய்மலை

Koviloor Digital Library

நம் அகத்தில் ஒப்புமைப்படுத்திய நட்சத்திரம் - மூர்த்தி - ஸ்தலம்

நம் உறுப்புக்கள் 32 முப்பத்திரண்டும் கூடிய ஒன்று மெய்		நட்சத்திரம் 28		சூக்கும்லிங்கம் ஆகிய வீரட்டம் அ(8), சத்தத்தானம்எ(7), வலியாதியர் (நவக்கோள்) கூ (9) நவநாயத்தலம் சந்தித்தானம் ௩ (3)
க.	குழல்	அச்வதி	வீரபத்திரன்	திருப்பறியல் வீரட்டம்
உ.	நெற்றி	பரணி	காலகாலன்	திருக்கடவூர் வீரட்டம்
௩.	பிடரி	ரோகிணி	சலந்தாரி	திருவிற்குடி வீரட்டம்
ச.	உச்சி	திருவாதிரை	அந்தகாரி	திருக்கோவலூர் வீரட்டம்
ரு.	புட்டம்	பூசம்	காமாரி	திருக்கொறுக்கை வீரட்டம்
சா.	இடை	ஆயில்யம்	கெஜாரி	திருப்பழுவூர் விரட்டம்
எ.	முதுகு	மகம்	புராரி	திருவதிகை வீரட்டம்
அ.	பின்தாரை	பூரம்	வைரவர்	திருக்கண்டியூர் வீரட்டம்
கூ.	கொப்பூழ்	அஸ்தம்	ஞாயிறு	திருவையாறு
ய.	மேல்வயிறு	சுவாதி	திங்கள்	திருப்பழனம்
யக.	நெஞ்சு	அநுடம்	செவ்வாய்	திருச்சோற்றுத்துறை
யஉ.	மார்பு	கேட்டை	புதன்	திருவேதிகுடி
ய௩.	குதம்	மூலம்	வியாழன்	திருக்கண்டியூர்

Koviloor Digital Library

௰௪.	குய்யம்	-	பூராடம்	-	வெள்ளி	-	திருப்பூந்துருத்தி
௰௫.	உதரம்	-	திருவோணம்	-	சனி	-	திருநெய்த்தானம்
௰௬.	மெய்	-	கார்த்திகை	-	ரவி	-	திருத்தில்லை
௰௭.	புயம்	-	மிருகசீரிடம்	-	மதி	-	திருஆலவாய்
௰௮.	அங்கை	-	புனர்பூசம்	-	சேய்	-	திருஅண்ணாமலை
௰௯.	விரல்	-	உத்தரம்	-	மால்	-	திருஆனைக்கா
௨௰.	கை	-	சித்திரை	-	பொன்	-	திருப்பெருந்துறை
௨௰௧.	தொடை	-	விசாகம்	-	கவி	-	திருவாரூர்
௨௰௨.	பாதம்	-	உத்திராடம்	-	காரி	-	திருப்புள்ளிருக்கு வேளூர்
௨௰௩.	மோவாய்	-	அவிட்டம்	-	ராகு	-	திருஇராமேச்சுரம்
௨௰௪.	விரல்	-	பூரட்டாதி	-	கேது	-	திருகேதீச்சுரம்
௨௰௫.	கபோலம்	-	சதயம்	-	சரம்	-	திருக்கடம்பர் கோயில்
௨௰௬.	குரல்வளை	-	உத்திரட்டாதி	-	திரம்	-	திருஐயடிகூர்மலை
௨௰௭.	கண்டம்	-	ரேவதி	-	உபயம்	-	திருஈங்கோய்மலை
௨௰௮.	மூக்கு	-		-	புதன்	-	
௨௰௯.	வாய்	-		-	செவ்வாய்	-	
௩௰.	கண்	-		-	வெள்ளி	-	
௩௰௧.	காது	-		-	வியாழன்	-	
௩௰௨.	கால்	-		-	சனி	-	
௩௰௩.	கடிதடம்	-	அபிஜித்	-			

Koviloor Digital Library

உ
சிவமயம்

இலிங்கபுராணம் விளக்கவுரை

இருபத்தோராயிரத்து அறுநூறுமைல் சுற்றளவு கொண்ட பூமியே விச்வ லிங்கம்.

அதில் நாள்மீன் இருபத்தேழும் அபிஜித் ஒன்றும் ஆகிய இருபத் தெட்டில் இரவிமதி யாதிபத்தியத்தால் இரட்டித்துள்ள ஐம்பத்தாறு தேசமே செக நாதலிங்கம்.

மலையும் யாறும் சூழ்ந்த இவ்வைம்பத்தாறுடன் பொன் மேருச் சிகரமும் அதிற்கால் கொண்டெழுந்த திருக் கோணமலை - திருச்சிராமலை - திருக்காளத்திமலை ஆகிய நான்குங் கூடிய அறுபதே அட்சயலிங்கம்.

இந்த அட்சய லிங்கம் அறுபதுகள் இராசி பனிரெண்டும் கோள் ஒன்பதும் நாள்மீன் இருபத்தேழும் கூடிய நாற்பத்தெட்டும் அமைவுபெற மூர்த்தி தலம் தீர்த்தம் ஆக வமைந்த நூற்றெட்டே திருப்பதி லிங்கம்.

இந்தத் தூலலிங்கத்திற் சூக்கும நிலத்தலமான விருப்த்தேழும் அமித பூரகங் கொள்ள வரும் இருநூற்றெழுபதுடன் அமித பூரக வேதை கொள்ளும் ஐந்தாய் விளங்கும் மலைத்தளங்களும் கூடிய இருநூற்றெழுபத்தைந்துமே (சித்தாந்தலிங்கம்) இந்தஇரு நூற்றெழுபத்தைந்து தலங்களும் திரு நெறிய தமிழ் மறைப்பாடல் பெற்றுள்ளன.

இவ்விரு நூற்றெழுபத்தைந்து தலங்களும் அமித பூரகமாகக் கொண்டமைந்த ஆதார சூக்குமத் தலங்கள். வீரட்டத்தலம் (அ) சத்தத் தானம் (எ) நவக்கோளாதிபர் தலம் - (கூ) சந்தித் தானம் (டு) ஆக - உ௰௭ - ம் - சூக்குமலிங்கம்.

இவற்றில் வழிபடற் கதீதமாயுள்ள சோதி லிங்கம், விச்வலிங்கம், செகநாத லிங்கம், அட்சய லிங்கம் ஆகிய நான்கையும் ஒருமைப்பாடுள்ள விஷு புண்ய காலத்திலும் அதிலிருகூறுகிய அயணபுண்ய காலத்திலும் அவ்வொன்றின் முக்கூறுகிய ஷட சீதி விஷ்ணுபதி புண்ய காலத்தினும் அமாவாசை யுகாதி அமாவாசை மன்வாதியாகிய நான்கு புண்ணிய காலங்களிலும் முறையே குளம், அருவி, ஆறு, கடல் ஆகிய இடங்களில் தற்பணங்காணலில் எட்டாமனின்ற அது இதுவாய்க் காணுங் கிரியையே அதீதலிங்கம். இதற்குரியமூர்த்தி ஆகமம் இலிங்கம் ஆவன..

இவ்வதீத லிங்கக் கிரியா மூர்த்திகள் ஒன்பதற்கும் ஆகமம் ஒன்பது லிங்கம் ஒன்பது தூல காரண சூக்கும இயலால் இருபத்தேழாகி யொன்று கூடிய இருபத் தெட்டாய் முற்கூறிய எல்லாவற்றையும் அடங்கக் கொண்டு நிற்பதால் பூரண லிங்கம் எனப்படும்.

Koviloor Digital Library

உ
சிவமயம்

இப்பூரண லிங்கத்தின் அமைவு பெறும் பொருட்களைப் பெற்று உருவாய் விளங்கும் மூர்த்தியையுடைய தலங்கள் இருபத்தெட்டிலுள்ள லிங்கங்கள் இருபத்தெட்டே அமிர்தலிங்கம்.

அமிர்த பூரண கார அடங்கலும் இலிங்கத்திரு வுருவாக நிற்கும் நிலையின் அகமாயும் புறமாயும் தோன்றிச் சமைந்த ஆறாதாரச் சோதியில் - கணபதி - அவந்தியில் மாகாளேச் சுரலிங்க மாகவும் - வைரவன் - காசியில் விச்வேசலிங்கமாகவும் - சித்திரக் கூத்தன் - இமையத்தில் கேதாரேச்சுர லிங்கமாகவும் - வீரபத்திரன் நர்மதா ஓங்காரலிங்கமாகவும் - முருகன் திருப்பருப் பதத்தில் - மல்லிகார்ச்சுன லிங்கமாகவும் - சாத்தன் தாருகாவனத்தில் தாருகேச்சுர லிங்கமாகவும் ஆக அகச்சமையம் ஆறின் மூர்த்திகளாய் நிற்கத் திக்கு பாலகர் சூராஷ்டிரத்தில் சோமநாத லிங்கமாகவும் பிரமன் சிவாலயத்தில் குச்மேச்சுரலிங்கமாகவும் திருமால் சேதுவில் ராமேச்சுரலிங்கமாகவும் - உருத்திரன் கௌதமியில் திரியம்பகேச்சுரலிங்கமாகவும் மாயை சிதாபுரத்தில் வைத்தியநாத லிங்கமாகவும் அறம்டாசினியில் - பீமசங்கரலிங்கமாகவும் - ஆகப் புறச்சமையம் ஆறின் மூர்த்திகளாய் நின்று பன்னிரண்டு சமையப் பொருளும் ஒன்றே எனவிளக்கும் சோதியா யமையலால் சோதிலிங்கம் பன்னிரண்டு எனப்பெறும்.

இப்பன்னிரண்டிற் காணுதிபத்தியத்திற்குச் சரியை கிரியையும் வைரவத்திற்கு அனுட்டான முத்திரையும் சௌந்திகத்திற்கு அணியெச்சமும் பாசுபதத்திற்கு ஞானமும் கௌமாரத்திற்குச் சாந்தி தவமும் சாக்தத்திற்கு யோகமும் ஆகிய ஆறு சாத்திரம் அமைவுபெறும். இவ்வாறே உலகாயதத்திற்குச் சோதியமும் பவுத்தத்திற்கு வேதமும் ஆருகதத்திற்கு யாகமும் மீமாஞ்சத்திற்கு நியதியும் சமணத்திற்கு வைத்தியமும் பாஞ்சராத் திரத்திற்கு மந்திரமும் ஆகிய ஆறு சாத்திரம் அமைவு பெறும். இவைகள் பன்னிரண்டாக இருப்பினும் ஒரே பொருளின் அகமாகவும் புறமாகவும் இருப்பதாலும் அகத்தை விட்டு புறமும் புறத்தை விட்டு அகமும் இருக்கமுடியாதாகை யாலும் சாத்திரம் ஆறேயாயிற்று.

இவ்வாறான சாத்திர லிங்கங்கள் எல்லாமும் தானாக அமைந்த வொன்றே இடைமருதீசலிங்கம் ஆக நிறைவு பெறும்.

KOVILOOR ANDAVAR
A. No. 46363
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

இதுவரை வெளியிட்ட நூல்கள்

வ.எண்.	நூலின் பெயர்		விலை
1.	கரண இலக்கணம்	ரூ.	5.00
2.	இராமாயண இலக்கியம்	ரூ.	27.00
3.	பஞ்சரிலக்கணச் சூக்கம்	ரூ.	25.00
4.	அகத்தியம்	ரூ.	108.00
5.	முத்திநெறி இலக்கணம்	ரூ.	51.00
6.	இலிங்க புராணம்	ரூ.	51.00
7.	பஞ்செய் கரணம்	ரூ.	5.00
8.	இரத்தினச் சுருக்க இராமாயணம்	ரூ.	21.00
9.	அண்டஒளி திருமூலர் திருமந்திரம் (சூனிய சம்பாதனை)	ரூ.	51.00
10.	கலைஞானம்	ரூ.	21.00
11.	திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை	ரூ.	400.00
12.	திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்	ரூ.	20.00
13.	நட்சத்திர பதிகங்கள்	ரூ.	51.00
13.	"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி" சற்குரு. சித.வே. சண்முகநாதபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு	ரூ.	51.00

Koviloor Digital Library

திரு. சித. ஏகப்பன் – திருமதி முத்துலெட்சுமி
59-ஆண்டு நிறைவு விழா சிருங்கேரி சாரதா பீடம், டொரான்டோ, கனடா.

Koviloor Digital Library



இந்நூலைப் பற்றி....

சமயகுரவர்கள் நால்வரும் ஐம்பூதங்களுக்கும் ஆதியாகிய நாதத்தை வசப்படுத்தி அதன் மூலம் பதிகம் ஆக்கி தந்துள்ளார்கள். பண்ணை ஓத ஓத பண்பாடாகிய பண் பூக்க ஆரம்பிக்கும். அந்தப்பண் பூக்க ஆரம்பித்தால் அதன்மூலம் உண்டாகும் மணம் பெறு மணமாகி எங்கும் பரவி நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் இனிமையான வாழ்வை வாழ வழிவகுத்து விடும். தொண்டர் நாதனை தூது விடுத்தது பதிகம் தான். முதலை உண்ட பாலனை அழைத்தது பதிகம் தான். எலும்பு பெண் உருவாகக் கண்டது பதிகம் தான். மறைக்கதவினை திறந்ததும் பதிகம் தான். ஆண் பனை பெண் பனையாகி பூத்து காய்த்ததும் பதிகம் தான். முயலகன் நோயை போக்கியது பதிகம் தான். விஷ சுரத்தை நீங்கியது பதிகம் தான். எல்லா அற்புதங்களையும் நாதத்தை பண்ணில் அமைத்து ஐம்பூதத்தையும் இயங்க வைத்தார்கள். அதன் மூலம் நாமும் பண்களின் நுட்பம் அறிந்து பதிகம் ஓதி ஓதி வீடுபேறு அடையலாம். "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என நமக்கு கூறிய அறவுரையை பின்பற்றி வேதத்தை உள்ளடக்கிய பதிகத்தை ஓதி பேரின்ப பெருவாழ்வு வாழ வேண்டும் என எழுதி நிறைவு செய்கின்றோம்.

இவண்
அடியார்க்கு அடியேன்
இராம. ஆதிரெத்தினம்

Sri Balaji Graphics, Coimbatore. 9361410269.